உங்கள் அபிமான தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்! கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com — மாற்றத்தின் ஆரம்பம் — dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 27.08.2026 • மலர் 04 • இதழ்: 239 • வியாழன் • Edition : Nagercoil • 27.08.2026 • Vol : 04 • Issue : 239 • Page : 4 • Rs. 5/-

# நேபாளத்தில் திடீர் வெள்ளம்: தமிழர்கள் உள்பட 400-க்கும் மேற்பட்ட இந்தியர்கள் தவிப்பு..!

நேபாளத்தில் ஏற்பட்ட திடீர் வெள்ளப்பெருக்கால் 8 பேர் உயிரிழந்துள்ளனர். தமிழகத்தைச் சேர்ந்தவர்களும் வெள்ளத்தில் சிக்கி இருப்பதாக தகவல்கள் வருகின்றன.

நேபால் நாட்டில் திபெத் எல்லையை ஒட்டி அமைந்துள்ள ரசுவா மாவட்டத்தில் பனி சூழ்ந்த ஏரி உருகி, மொத்தமாக நீர் வெளியேறியதால் திடீரென வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இதனால் வணிக கட்டிடங்கள், வீடுகள், வாகனங்கள் எல்லாம் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன.

இந்த வெள்ளத்தில், சுமார் 19 பாலங்கள், 40 கிலோ மீட்டர் சாலைகள், 200 வாகனங்கள் நீரில் அடித்துச் சென்றதாகவும் கூறப்படுகிறது

## "நிலநடுக்கமே காரணம்"

"நேபாள பெரு வெள்ளத்திற்கு நிலநடுக்கமே காரணம். கோடாரி பகுதியில் 4.4 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. நிலநடுக்கத்தால் பனி ஏரியில் உடைப்பு ஏற்பட்டு, பெருவெள்ளம் உருவாகியுள்ளது"

நேபாள அரசு



இந்தநிலையில், நேபாளத்துக்கு புனிதப் பயணம் சென்ற தமிழகத்தைச் சேர்ந்த 57 பேர் ரசுவா மாவட்டத்தின் திமுர் பகுதியில் சிக்கியுள்ளதாக தகவல்கள் வருகின்றன.

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் உள்ள சூப்பர் யாத்ரா ஏஜென்சி மூலம் கும்பகோணம், மயிலாடுதுறை, ஓசூர் உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து 57 பேர் விமானம் மூலம் நேபாளம் உள்ளிட்ட வட மாநிலத்திற்கு 13 நாட்கள் சுற்றுலா சென்றுள்ளனர்.

கடந்த மூன்று நாட்களுக்கு முன்பு புறப்பட்ட அவர்கள் மூன்று பேருந்துகளில் இரண்டு நாள் நேபாளத்தில் சுற்றிவிட்டு இன்று காலை தான் எல்லை விட்டு திபெத் சென்றனர் என்று அந்த ஏஜென்சியின் உரிமையாளர் சாதிக் தெரிவித்துள்ளார்,

"ஒரு பேருந்தில் உள்ள 20 பேர் மட்டுமே பாதுகாப்பாக இருப்பதாக தன்னை தொடர்பு கொண்டு கூறினர்.

## தமிழர்களின் விவரம் வெளியீடு

நேபாளத்தில் பாதுகாப்பாக உள்ள 20 தமிழர்களின் விவரம் வெளியீடு

சிவரஞ்சனி, கற்பகம், மாறன், சாந்தி, முத்து குமரேசன், நவோகபிர்தாஸ், விஜய புவனேஸ்வரி, மைதிலி, தியாகராஜன், கிருப ஹரி, வள்ளிநாயகி, சத்தியா, புஷ்பராணி, கனகசபை, ராதை, ரத்தினகுமார், பூங்குழலி, பழனியப்பன், மணிமேகலை, முருகானந்தம் ஆகிய 20 பேரும் பாதுகாப்பாக இருப்பதாக தகவல்

மேலும் இரண்டு பேருந்துகளின் நிலை என்ன என்பது தெரியவில்லை. அதில் 37 பேர் இருக்கின்றனர்" என்றும் கூறியுள்ளார்.

தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் உட்பட பல இந்தியர்கள் வெள்ளத்தில் சிக்கி இருப்பதாகவும் தகவல்கள் வருகின்றன.

நேபாளம் வெள்ளம் தொடர்பான உதவிக்கு 1800 309 3793 என்ற கட்டணமில்லாத எண்ணை தொடர்பு கொள்ளலாம் என தமிழக அரசு அறிவித்துள்ளது. முதற்கட்ட தகவலின்படி, மொத்தம் 384 பயணிகள் காணாமல் போய் உள்ளதாகவும், இதில் 291 பேர் வெளிநாட்டினர், 93 பேர் நேபாள நாட்டினர் எனவும் நேபாள சுற்றுலா வாரியம் கூறியுள்ளது. வெள்ளப்பெருக்கு அதிகமாக இருப்பதால் மீட்பு ட்ரூ காலர் ல போயட்ரூ கா சிக்கல் ஏற்பட்டுள்ளது.

# மாணவர்களின் வளர்ச்சியில் ஆசிரியர்கள் முழு கவனம் செலுத்த வேண்டும்

## மாவட்ட ஆட்சித்தலைவர் பிரதாப் அறிவுறுத்தல்




நாகர்கோவில், ஆக.27

கன்னியாகுமரி மாவட்ட பள்ளிகல்வித்துறையின் சார்பில் நாகர்கோவிலில் உள்ள தனியார் பொறியியல் கல்லூரி கலையரங்கில் அனைத்து பள்ளி தலைமையாசிரியர்களுக்கான வழிகாட்டுதல் கூட்டம் நடைபெற்றது. மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆர். ஸ்டாலின் தலைமை வகித்தார். இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் தலைமையாசிரியர்களிடையே சிறப்புரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது:

கல்வியில் முன்னணியில் உள்ள குமரி மாவட்டத்தில், கடந்த சில வாரங்களாகப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் எதிர்பாராத மற்றும் தேவையில்லாத சில விரும்பத்தகாத சம்பவங்கள் நடந்துள்ளது வருத்தமளிக்கிறது. வளரிளம் பருவத்தில் ஏற்படும் உடலியல் மற்றும் ஹார்மோன் மாற்றங்கள், குடும்பச் சூழல், கல்விப் போட்டி மற்றும் சக மாணவர்களின் தாக்கம் ஆகியவற்றால் மாணவர்கள் மன அழுத்தத்திற்கு ஆளாகின்றனர். மாணவர்களின் தவறான முடிவுகளால் அவர்களின் குடும்பங்களும், பெற்றோர் கட்டிய கனவுகளும் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. பள்ளிகளில் ஏதேனும் அசாதாரண சம்பவங்கள் அல்லது பிரச்சனைகளுக்கான அறிகுறிகள் தென்பட்டால், ஆசிரியர்கள் அவற்றை உடனடியாக மாவட்ட நிர்வாகம், முதன்மை கல்வி அலுவலர் அல்லது காவல் துறைக்கு (நிமிர் குழு/ காவல் நிலையம்) தகவல் தெரிவிக்க வேண்டும். பிரச்சனைகளை ஆசிரியர்கள் மட்டுமே தனிப்பட்ட முறையில் கையாள முயலாமல், உரிய அலுவலர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று ஆலோசனைகள் மற்றும் சட்டப்பூர்வ வழிகாட்டுதல்களைப் பெற வேண்டும்.

அனைத்துப் பள்ளிகளிலும் அரசாணையின்படி அமைக்கப்பட்டுள்ள 'போதைப்பொருள் எதிர்ப்பு கிளப்' செயல்பாடுகளை வெறும் படிவங்கள் மற்றும் புகைப்படங்களுடன் நிறுத்தாமல், தீவிரமாக நடைமுறைப்படுத்த வேண்டும். தவறு செய்யும் மாணவர்களை ஆசிரியர்கள் மற்ற மாணவர்களின் முன்னிலையில் மனம் புண்படும்படியும் மற்றும் அவதூறான வார்த்தைகளை பயன்படுத்தி, பேசவும் தண்டிக்கவும் கூடாது. சமூக வலைதளங்களின் தவறான தாக்கம் மற்றும் வளரிளம் பருவ ஈர்ப்புகளால் ஏற்படும் சிக்கல்களை ஆசிரியர்கள் மிகவும் உணர்வுப்பூர்வமாக அணுக வேண்டும். மாணவர்களுக்குப் போக்சோ சட்டம், உடலியல் மாற்றங்கள் மற்றும் சட்ட விழிப்புணர்வு குறித்துப் பேசிப் அவற்றை எடுத்துரைக்க வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் பேசினார். நடைபெற்ற கூட்டத்தில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் பிரின்ஸ் ஆரோக்கிய ராஜ், மாவட்ட கல்வி அலுவலர்கள் ஜெயராஜ் (நாகர்கோவில்), சௌந்தர் ராஜ் (மார்த்தாண்டம்), கிஷோர் (தொடக்க கல்வி), அஜிதா (தனியார் பள்ளிகள்), துறை அலுவலர்கள், தலைமையாசிரியர்கள், உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

# எரிவாயு நுகர்வோர்களுக்கான குறை தீர்க்கும் நாள் கூட்டம்

சேலம் ஆக 27

சேலம் மாவட்ட உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலகம் சேலம் மாவட்டத்தில் எரிவாயு உருளைகள் பயன்படுத்துவோர் எரிவாயு உருளைகள் பதிவு செய்வதிலும் விநியோகம் செய்வதில் உள்ள குறைபாடுகள் மற்றும் புகார்கள் தொடர்பாக ஏரிவாயு பெறும் வாடிக்கையாளர்கள், அனைத்து எண்ணெய் நிறுவனங்களின் ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் எரிவாயு முகவர்கள் ஆகியோர்களை கொண்டு சேலம் மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையில் எரிவாயு நுகர்வோர்களுக்கான ஆகஸ்ட் மாத 2026 மாதாந்திர குறைதீர்க்கும் நாள் கூட்டம் வருகிற 28.08.2026 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3:30 மணிக்கு சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலக முதல் தளத்தில் அறை எண் 115 ல் மகிழம் கூட்ட அரங்கில் நடைபெற உள்ளது.

இந்த கூட்டத்தில் சேலம் மாவட்டத்தில் உள்ள எரிவாயு நுகர்வோர்கள் அனைவரும் இக்குறை தீர்க்கும் கூட்டத்தில் கலந்து கொண்டு தங்கள் குறைகளை மனுக்களாக அளித்து தீர்வு பெறுமாறு சேலம் மாவட்ட வருவாய் அலுவலர் ரவிக்குமார் தெரிவித்துள்ளார்.

# லாரி மீது தனியார் சொகுசு பேருந்து மோதி விபத்து

## தெலங்கானாவில் 6 பயணிகள் உயிரிழப்பு




ஹைதராபாத்: தெலங்கானா மாநிலம், சூரியாபேட்டை மாவட்டத்தில் இரும்பு லோடோடு நின்று கொண்டிருந்த லாரியின் பின்புறம், இன்று காலை ஆந்திரா நோக்கி சென்று கொண்டிருந்த தனியார் சொகுசுப் பேருந்து வேகமாக மோதிய விபத்தில் பேருந்தில் தூங்கிக் கொண்டிருந்த 5 பெண்கள் உட்பட மொத்தம் 6 பேர் உயிரிழந்துள்ளனர். 20 பயணிகள் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தெலங்கானா மாநில தலைநகர் ஹைதராபாத்தில் இருந்து ஆந்திர மாநிலம் ஏலூரு நேக்கி நேற்றிரவு 42 பயணிகளை ஏற்றிக்கொண்டு தனியார் சொகுசுப் பேருந்து சென்று கொண்டிருந்தது. காலை 9 மணியளவில் சூரியாபேட்டை கோதாடா எனும் ஊருக்கு செல்லவேண்டிய சொகுசு பேருந்தை குறிப்பிட்ட இடத்திற்கு கொண்டு செல்ல ஓட்டுநர் பேருந்தை அதிவேகமாக இயக்கியுள்ளார். அதிகாலை 4 மணியளவில் கோதாடா அருகே துவாரகுண்டா எனும் இடத்தில் அதிவேகமாக சென்ற பேருந்து சாலை வளைவில் திருப்ப முயன்று, முன்னால் இரும்பு லோடுடுன் பழுதாகி நிறுத்திவைக்கப்பட்டிருந்த லாரியின் பின்புறம் பயங்கரமாக மோதி விபத்துக்குள்ளானது.

இந்த கோர விபத்தில் பேருந்தில் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்த என்டிஆர் மாவட்டத்தை சேர்ந்த சின்னா (32), விஜயவாடாவை சேர்ந்த ஜோஷ்னா (29), நாகேந்திர பாபு ((21), ஷாஹினா (30), பாவனா, லட்சுமி ஆகிய 6 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் 20 பயணிகள் படுகாயமடைந்தனர். காயமடைந்த அனைவரும் கோதாடா அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதனிடையே, விபத்து ஏற்படுத்திய பேருந்து ஓட்டுநர் மல்லிகார்ஜுனா தலைமறைவாகி உள்ளார்.

கோதாடா போலீஸார் நடத்திய முதற்கட்ட விசாரணையில், பேருந்து ஓட்டுநர் மல்லிகார்ஜுனா தூக்க கலக்கத்தில் இருந்ததாகவும், அதிவேகமாக பேருந்தை இயக்கியதாலும் தான் விபத்து நடந்தது என்பது தெரியவந்துள்ளது. மேலும், இது குறித்து கோதாடா போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

தலைவர்கள் இரங்கல்

இதனிடையே, விபத்து குறித்து தகவல் அறிந்த தெலங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டி, ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு, துணை முதல்வர் பவன் கல்யாண், ஆந்திர கல்வித்துறை அமைச்சர் லோகேஷ் ஆகியோர் சமூக வலைத்தளத்தில் தங்களின் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துள்ளனர். மேலும், காயமடைந்தவர்களுக்கு உயரிய சிகிச்சை அளிக்கும்படி ரேவந்த் ரெட்டி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

# புதுக்கடை அருகே எல்லை பாதுகாப்பு படை வீரரின் வங்கி கணக்கிலிருந்து ரூ.8.50 லட்சம் பணம் மோசடி போலீஸ் விசாரணை

புதுக்கடை, ஆக.27

புதுக்கடை அருகே உள்ள தேங்காப்பட்டணம் பகுதி அரையன் தோப்பு என்ற இடத்தை சேர்ந்தவர் நாராயணன் மகன் மணிகண்டன் (49) இவர் சட்டீஸ்கர் மாநிலத்தில் எல்லை பாதுகாப்பு படை வீரராக பணியாற்றி வருகிறார்.

இவருக்கு கர்நாடகா சிபலாபூர் வங்கியில் கணக்கு உள்ளது.

இந்த நிலையில் இவரது வங்கி கணக்கில் இருந்து ஆன்லைன் மூலம் ரூ.8 லட்சத்து 50 ஆயிரம் திடீரென மாயமாகியுள்ளது. ஏதோ அடையாளம் தெரியாத இரண்டு பேர் இந்த ஏமாற்றி இந்த பணத்தை எடுத்ததாக தெரிய வருகிறது. இது குறித்து மணிகண்டன் புதுக்கடை போலீசில் புகார் அளித்தார். மிக நவீன முறையில் ஆன்லைன் மூலம் இந்த பண மோசடி நடந்துள்ளது. பணத்தை எந்த முறையில் மோசடி செய்தார்கள் என புதுக்கடை போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் கார்த்திக் வழக்கு பதிவு செய்து இன்ஸ்பெக்டர் மீனா இது குறித்து விசாரணை நடத்தி வருகிறார்.

# "நெல் கொள்முதல் நிலையங்களில் தொடரும் லஞ்ச வசூல்" தினகரன் ஆதங்கம்



சென்னை: "நெல் கொள்முதல் நிலையங்களில் லஞ்ச வசூல் தொடர்கிறது. லஞ்சத்திற்கு எதிரான முதல்வரின் முழக்கம் நடைமுறைக்கு உதவாத வெறும் சினிமா வசனம் தானா?" என்று அமமுக பொதுச் செயலாளர் டிடிவி.தினகரன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், "கடலூர் மாவட்டம், பண்ருட்டி அருகே செயல்பட்டு வரும் நெல் கொள்முதல் நிலையத்தில், மூட்டை ஒன்றுக்கு ரூ.50 வரை லஞ்சம் கொடுத்தால் மட்டுமே நெல்லைக் கொள்முதல் செய்ய முடியும் என அங்குள்ள அதிகாரிகள் தெரிவிப்பதாக விவசாயிகள் தங்களது வேதனையையும் ஆதங்கத்தையும் பதிவு செய்துள்ளனர்.

ஏற்கனவே, தவெக அரசு அறிவித்த முழுமையான பயிர்க்கடன் தள்ளுபடியை நம்பி ஏமாந்து கடனாளிகளாகியுள்ள விவசாயிகள், மேலும் கடன் பெற்று விளைவித்த நெல்லை கொள்முதல் நிலையங்களுக்குக் கொண்டு வந்த நிலையில், லஞ்சம் கேட்டு உரிய நேரத்தில் கொள்முதல் செய்ய மறுக்கும் அதிகாரிகளால், கடந்த 15 நாட்களாக ஆயிரக்கணக்கான நெல் மூட்டைகள் மழையில் நனைந்து வீணாகும் அவலநிலை ஏற்பட்டுள்ளது.

விவசாயிகளின் கண்ணீரை துடைக்க வேண்டிய அரசு நிர்வாகம், நெல் மூட்டைகளோடு அவர்களின் உழைப்பையும் வீணாக்கிக் கொண்டிருப்பதோடு, விவசாயிகள் விளைவித்த நெல்லுக்கு விலை நிர்ணயிக்கப்படுவதற்கு முன்பாகவே லஞ்சத்திற்கான தொகையை நிர்ணயிக்கும் நிலையை உருவாக்கியிருப்பது மிகுந்த வேதனைக்குரியதாகும்.

இதே கடலூர் மாவட்டத்திலுள்ள நெல் கொள்முதல் நிலையங்களில் கடந்த மாதம் ஆய்வுக்கு வந்த உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர், லஞ்ச வசூலில் ஈடுபட்ட அதிகாரி மீது நடவடிக்கை எடுத்திருந்த நிலையில், மீண்டும் இதுபோன்ற லஞ்ச வசூல் தொடர்ந்து நடைபெற்று வருவது, தவெக அரசின் மீதான விவசாயிகளின் நம்பிக்கையை முற்றிலுமாக இழக்கச் செய்துள்ளது.

# பெரியகுளம் வட்டார அளவிலான குறுவட்ட தடகளப் போட்டிகள்



பெரியகுளம் ஆக.24

பெரியகுளம் அருகே வைகை அணையில் உள்ள தனியார் பள்ளி வளாகத்தில் பெரியகுளம் வட்டார அளவிலான "டி" பிரிவு குறுவட்ட தடகளப் போட்டிகள் தொடர்ந்து 3 நாட்கள் நடைபெற்றன. இந்த போட்டிகளில் பெரியகுளம் வட்டாரத்தைச் சேர்ந்த அரசு பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் மெட்ரிக் பள்ளிகள் என 35க்கும் மேற்பட்ட பள்ளிகளில் இருந்து சுமார் 900 மாணவ, மாணவிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். போட்டிகளில் 100 மீட்டர், 200 மீட்டர், 400 மீட்டர், 600 மீட்டர், 1,500 மீட்டர், 3,000 மீட்டர் ஓட்டப்பந்தயம், நீளம் தாண்டுதல், தட்டு எறிதல், ஈட்டி எறிதல், குண்டு எறிதல், தொடர் ஓட்டம் உள்ளிட்ட பல்வேறு தடகளப் போட்டிகள் நடைபெற்றன. போட்டிகளை தேனி மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் குபேந்திரன் தொடங்கி வைத்து, மாணவ, மாணவிகளுக்கு விளையாட்டின் முக்கியத்துவம் குறித்து வாழ்த்துகளை தெரிவித்தார். மூன்று நாட்களாக நடைபெற்ற போட்டிகளில் மாணவர்கள் மிகுந்த ஆர்வத்துடனும், விளையாட்டு திறமையுடனும் பங்கேற்றனர். இந்த போட்டிகளில் சில்வார்பட்டி அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளி சார்பில் கலந்து கொண்ட மாணவியர்கள் பல்வேறு தடகளப் போட்டிகளில் சிறப்பாக விளையாடி பள்ளிக்கு பெருமை சேர்த்தனர்.

குறிப்பாக 14 வயதுக் குட்பட்டோர் பிரிவில் நடைபெற்ற 3 போட்டிகளில் முதலிடம் பெற்று வெற்றி பெற்றதுடன், சாம்பியன்ஷிப் பட்டத்தையும் கைப்பற்றினர். அதேபோல் 17 வயதுக் குட்பட்டோர் பிரிவிலும் முதலிடம் பெற்று சாம்பியன்ஷிப்பை வென்று சாதனை படைத்தனர். மேலும் தனிப்பட்ட போட்டிகளில் முதல் மற்றும் இரண்டாம் இடங்களைப் பிடித்த மாணவ, மாணவிகள் அடுத்த கட்டமாக நடைபெற உள்ள மாவட்ட அளவிலான போட்டிகளில் கலந்து கொள்ள தகுதி பெற்றுள்ளனர். இதன் மூலம் சில்வார்பட்டி அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளிக்கு மேலும் பெருமை கிடைத்துள்ளது. வெற்றி பெற்ற மாணவியர்களை பாராட்டும் வகையில் போட்டி ஏற்பாட்டாளர்கள் சார்பில் சான்றிதழ்கள், பதக்கங்கள் மற்றும் பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். மாணவியர்களின் இந்த வெற்றிக்கு பள்ளி தலைமை ஆசிரியர் பாண்டியன், ஆசிரியர்கள், உடற்கல்வி ஆசிரியர் ஜமின்தார் மற்றும் பெற்றோர்கள் பாராட்டு தெரிவித்தனர். போட்டிகளுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் வைகை அணை அரசு மேல்நிலைப்பள்ளி நிர்வாகத்தினர் சிறப்பாக செய்திருந்தனர். மூன்று நாட்களாக நடைபெற்ற போட்டிகள் மாணவ, மாணவிகளின் விளையாட்டுத் திறனை வெளிப்படுத்தும் சிறந்த வாய்ப்பாக அமைந்தது.



# பென்னாகரம் அரசு தலைமை மருத்துவமனையில் ஆட்சியர் திடீர் ஆய்வு

தருமபுரி ஆகஸ்ட் 27

தருமபுரி மாவட்டம் பென்னாகரம் அரசு தலைமை மருத்துவமனையில் மாவட்ட ஆட்சியர் சரவணன் திடீர் ஆய்வு மேற்கொண்டார். மருத்துவமனையில் உள்ள அவசர சிகிச்சை பிரிவு, பொது நல பிரிவு, மகப்பேறு பிரிவு ஆகியவைகளில் ஆய்வு மேற்கொண்ட ஆட்சியர் நோயாளிகளிடம் அளிக்கப்படும் சிகிச்சையில் குறித்து கேட்டறிந்தார். மேலும் மருத்துவமனையில் நோயாளிகளுக்கு சிறந்த முறையில் சிகிச்சைகள், அடிப்படை வசதிகள் வழங்குவதை உறுதி செய்ய வேண்டும் என்று மருத்துவமனையில் பணிபுரியும் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தியனார். இந்த ஆய்வின்போது மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருத்துவமனை பணியாளர்கள் உடனிருந்தனர்.

# பாலக்கோடு, பஞ்சப்பள்ளியில் புகையிலை பொருட்கள் விற்ற 2 கடைகளுக்கு ரூ.75 ஆயிரம் அபராதம்

## உணவு பாதுகாப்பு துறை அதிகாரி நடவடிக்கை



தருமபுரி ஆகஸ்ட் 27

தருமபுரி மாவட்டத்தில் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் விற்பனையை தடுக்கும் வகையில், காவல்துறை மற்றும் உணவு பாதுகாப்புத்துறையினர் தொடர்ந்து ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர். பாலக்கோடு பேருந்து நிலையத்தில் செயல்பட்டு வந்த பீடா கடையில் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் விற்பனை செய்யப்படுவது கண்டறியப்பட்டது. இதையடுத்து கடை உரிமையாளர் மீது காவல் நிலையத்தில் புகார் பதிவு செய்யப்பட்டது. தொடர்ந்து உணவு பாதுகாப்புத்துறை சார்பில் அந்த கடை செயல்பட தடை விதிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து பாலக்கோடு ஒன்றிய உணவு பாதுகாப்பு அலுவலர் திருப்பதி மேற்கொண்ட நடவடிக்கையில், சம்பந்தப்பட்ட கடை 30 நாட்களுக்கு செயல்பட தடை விதிக்கப்பட்டதுடன், ரூ.50 ஆயிரம் அபராதமும் விதிக்கப்பட்டது. இதேபோல், பஞ்சப்பள்ளி காவல் நிலையத்தில் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் விற்பனை செய்ததாக பதிவு செய்யப்பட்ட வழக்கின் அடிப்படையில், பஞ்சப்பள்ளி மூன்று ரோடு பகுதியில் செயல்பட்டு வந்த மளிகைக் கடை மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அந்த கடை 14 நாட்களுக்கு செயல்பட தடை விதிக்கப்பட்டதுடன், ரூ.25 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டது. இதன் மூலம் பாலக்கோடு மற்றும் பஞ்சப்பள்ளி பகுதிகளில் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் விற்பனை செய்ததாக இரண்டு கடைகளுக்கு மொத்தம் ரூ.75 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. மேலும், தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்களை விற்பனை செய்வது கண்டறியப்பட்டால், சம்பந்தப்பட்ட கடை உரிமையாளர்கள் மீது தொடர்ந்து கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

# குடிநீர் தட்டுப்பாட்டை போக்கிய ஊராட்சி மன்ற தலைவர் மேனகா விவேகானந்தருக்கு பொதுமக்கள் பாராட்டு



திருப்பத்தூர்:ஆக:27,

திருப்பத்தூர் மாவட்டம் கந்திலி ஒன்றியத்திற்கு உட்பட்ட எலவம்பட்டி ஊராட்சியில் செயல்பட்டு வரும் அரசு உயர்நிலைப் பள்ளியில் குடிநீர் தட்டுப்பாட்டினை போக்கிய ஊராட்சி மன்ற தலைவர் மேனகா விவேகானந்தன்.

ஆசிரியர்கள், மாணவ மாணவிகள் மற்றும் பெற்றோர்கள் கூறிய கோரிக்கையினை ஏற்று ஒரே நாளில் பஞ்சாயத்து நிர்வாகத்தின் சார்பில் இரண்டு ஆழ்துளை கிணறுகளை சரி செய்து தினமும் 12 ஆயிரம் லிட்டர் தண்ணீர் பயன்பாட்டிற்கு வந்தது. இந்நிலையில் அவ்வப்போது வறச்சி காலம் என்பதால் தட்டுப்பாடு இருந்தும், பள்ளி மாணவ மாணவிகளில் அடிப்படை தேவை பாதிக்கக்கூடாது என உடனடியாக பஞ்சாயத்து நிர்வாகத்தின் சார்பில் பயன்பாட்டிற்கு கொண்டு வந்ததற்கு பொதுமக்கள் மகிழ்ச்சியுடன் நன்றி தெரிவித்தனர்.

# போச்சம்பள்ளி அருகே ஸ்ரீதேவி பூதேவி சமேத ஸ்ரீ சென்றாயபெருமாள், காட்டு வீர ஆஞ்சநேயர் கோயில் கும்பாபிஷேகம் விழா



கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி அருகே உள்ள அகரம் அடுத்த பட்டகரஅள்ளி வன்னியர் குட்டை மலை அடிவாரத்தில் அமைந்துள்ள பழமை வாய்ந்த ஸ்ரீ தேவி பூதேவி சமேத ஸ்ரீ சென்றாயபெருமாள் மற்றும் ஸ்ரீ காட்டு வீர ஆஞ்சநேயர் திருக்கோயில் இந்து அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ளது இந்த கோவிலில் மகா கும்பாபிஷேக விழா இன்று மிக விமரிசையாக நடைபெற்றது.

கடந்த சில நாட்களாகவே கும்பாபிஷேகத்தை முன்னிட்டு கணபதி ஹோமம், லட்சுமி ஹோமம், யாக சாலை பூஜைகள் உள்ளிட்ட பல்வேறு முதல்கட்ட ஆன்மீக சடங்குகள் வேதம் ஓதும் அர்ச்சகர்களால் முறைப்படி நடத்தப்பட்டு வந்தன. விழாவின் முக்கிய நிகழ்வான இன்று காலை, புனிதநீர் அடங்கிய கலசங்கள் மங்கள வாத்தியங்கள் முழங்க யாக சாலையில் இருந்து ஊர்வலமாகக் கொண்டு வரப்பட்டன. தொடர்ந்து, சிவாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் முழங்க, ஸ்ரீ தேவி பூதேவி ஸ்ரீ சென்றாயபெருமாள் மற்றும் காட்டு வீர ஆஞ்சநேயர் சுவாமிகளின் விமான கலசங்களின் மீது புனிதநீர் ஊற்றப்பட்டு மகா கும்பாபிஷேகம் வெகு விமர்சையாக நடத்தப்பட்டது. அப்போது அங்கிருந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் "கோவிந்தா...கோவிந்தா...", "ஜெய் ஸ்ரீராம்..." என பக்தி முழக்கங்களை எழுப்பி சுவாமி தரிசனம் செய்தனர். கும்பாபிஷேகத்தை தொடர்ந்து மூலவருக்கும் பரிவார தெய்வங்களுக்கும் சிறப்பு அபிஷேகம், தீபாராதனை மற்றும் அலங்காரம் நடைபெற்றது. விழாவுக்கு வந்திருந்த ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கு பிரசாதமும், அன்னதானமும் வழங்கப்பட்டன. விழாவிற்கான பாதுகாப்பு கருதி நாகரசம்பட்டி போலீசார் மற்றும் தீயணைப்பு துறையினர் பாதுகாப்பில் ஈடுபட்டனர். மற்றும் அடிப்படை ஏற்பாடுகளை விழாக் குழுவினரும், உள்ளூர் நிர்வாகமும் சிறப்பாக செய்திருந்தனர்.

# கோவையில் சித்தாபுதூர் ஐயப்பன் கோவிலில் ஓணம் பண்டிகை சிறப்பு வழிபாடு



கோவை ஆக:27

கோவையில் பிரசித்தி பெற்ற சித்தாபுதூர் ஐயப்பன் கோவிலில் ஓணம் பண்டிகையை முன்னிட்டு சிறப்பு வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. ஓணம் பண்டிகையையொட்டி அதிகாலை 5 மணிக்கு கோவில் நடை திறக்கப்பட்டது.

தொடர்ந்து கோவிலில் உள்ள சுவாமிகளுக்கு புத்தாடைகள் அணிவிக்கப்பட்டு, சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. சுவாமி சன்னதி முன்பு டன் கணக்கில் பூக்களை கொண்டு பிரம்மாண்டமான அத்தப்பூ கோலம் அமைக்கப்பட்டுள்ளது. வண்ணமயமான பூக்களால் அலங்கரிக்கப்பட்ட அத்தப்பூ கோலம் பக்தர்களை வெகுவாக கவர்ந்து வருகிறது. மேலும், ஓணம் பண்டிகையை முன்னிட்டு மலையாள மொழி பேசும் மக்கள் புத்தாடைகள் அணிந்து, குடும்பத்துடன் கோவிலுக்கு வந்து சுவாமி தரிசனம் செய்து வருகின்றனர். கோவில் முழுவதும் ஓணம் பண்டிகை உற்சாகம் நிறைந்து காணப்படுகிறது.

# தஞ்சாவூர் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்

## கூட்டுறவு வங்கிகளில் உரத்தட்டு பாட்டை போக்க வேண்டும்



தஞ்சாவூர் ஆகஸ்ட் 27

தஞ்சாவூரில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற் றது. கூட்டத்தில் வங்கிகளில் உரத் தட்டுபாட்டை போக்க வேண்டும் விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்

தஞ்சாவூர் வருவாய் கோட்டாட்சி யர் அலுவலக கூட்டரங்கில் வருவாய் கோட்டாட்சியர் நித்யா தலைமை தாங்கினார் .கூட்டத்தில் விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டு தெரிவித்த கருத்துக்கள் வருமாறு

அம்மையகரம் ஏ கே ஆர் ரவிச்சந்தர்

5 ஏக்கர் வரை உள்ள விவசாயிகள் ரூபாய் 1.50 லட்சம் வரை வாங்கிய கடன்களை தமிழக அரசு தள்ளுபடி செய்ய வேண்டும் பெரம்பூர் அறிவழகன் குறுவைத் தொகுப்பு பணத்தை விரைவில் வழங்க வேண்டும். கூட்டுறவு வங்கிகளின் நிலவும் உரத்தட்டு பாட்டை போக்க முன் கூட்டியே திட்டமிட வேண்டும். சம்பா பருவத்தில் அந்தந்த பகுதிக்கு ஏற்ற விதை நெல் ரகங்களை வேளாண்மை அலுவலகங்களில் இருப்பு வைத்து விநியோகம் செய்ய வேண்டும்

சிறு புலியூர் பஞ்சாபிகேசன்தூ

ரியாறு வடிகால் வாய்க்காலில் மருத்துப கழிவு நீர் கலக்கிறது. இதை தடுக்க வேண்டும். ஆகாயத்தாமரை வளர்ந்து காணப்படுகிறது . இதை அகற்ற வேண்டும்

அமலாபட்டு தெற்கு மாதவன்

விவசாயிகளுக்கு தரமான விதை நெல் வழங்க வேண்டும். தட்டுப் பாடு இல்லாத உரம், பாசன உத்தரவாதம், சந்தை வாய்ப்பு, கொள்முதல் உத்தரவாதம், போன்றவற்றில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

நெல் மூட்டை களை பாதுகாப்பாக வைக்க போதிய அளவு குடோன் வசதிகளை ஏற்படுத்த வேண்டும்.

மேற்கண்ட விவசாயிகள் பேசினர்

# சென்னையில் தங்கமயில் ஜுவெல்லரி மேலும் இரண்டு இடங்களில் துவக்கம்



சென்னை, ஆக.27, தங்கமயில் நிறுவனம் கடந்த 35 ஆண்டுகளாக தங்க நகை விற்பனையில் தனக்கென தனிப்பெருமை அடையாளத்தை பதித்துள்ளது. சென்னையில் தி.நகர், பல்லாவரம், ஆகிய இடங்களில் துவக்கியுள்ள தங்கமயில் ஜுவல்லரி மேலும் புரசைவாக்கம், முகப்பேர் ஆகிய இடங்களில் துவக்கப்பட்டுள்ளது. வருகை தந்த வாடிக்கையாளர் அனைவரையும் கடை நிறுவனர் பலராம கோவிந்ததாஸ் மற்றும் நிர்வாக இயக்குனர், பா .ரமேஷ், இணை நிர்வாக இயக்குனர்கள் என் .பி. குமார், ஆகியோர் அன்புடன் வரவேற்றனர்.

# பர்கூர் தெற்கு ஒன்றிய புளியம்பட்டி ஊராட்சி கழகம் சார்பில், விஜயகாந்தின் 74வது பிறந்தநாள் விழா

## வறுமை ஒழிப்பு தினமாக கொண்டாடி 500க்கும் மேற்பட்டோருக்கு அன்னதானம்



கிருஷ்ணகிரி ஆகஸ்ட் 27:

தேமுதிக நிறுவனர் புரட்சிக் கலைஞர் மறைந்த கேப்டன் விஜயகாந்தின் 74 வது பிறந்த நாள் விழா கட்சியினரால் வறுமை ஒழிப்பு தினமாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இதையொட்டி தமிழகம் முழுவதும் விஜயகாந்தின் சிலை மற்றும் திருவுருவ படங்களுக்கு தேமுதிகவினர் மலர் தூவி மரியாதை செலுத்தி வருகின்றனர். இதன் ஒரு பகுதியாக கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் பர்கூர் தெற்கு ஒன்றியம் புளியம்பட்டி ஊராட்சி கழகம் சார்பில் தேமுதிக ஒன்றியச் செயலாளர் பி.திருநாவுக்கரசு தலைமையில் உற்சாகமாக கேக் வெட்டியும், பட்டாசு வெடித்தும் கொண்டாடினார்கள். கிழக்கு மாவட்ட கழக செயலாளர் கே.ஆர். சின்னராஜ் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு அன்னதான நிகழ்ச்சியை துவக்கி வைத்தார். ஒன்றிய அவைத் தலைவர் எஸ் ஆர் பழனி முன்னிலை வகித்தார். ஒன்றிய பொருளாளர் டி.எம். குமார் வரவேற்புரை ஆற்றினார். இந்தநிகழ்விற்கு மாவட்ட பொருளாளர் லட்சுமணன் மாநில பொதுக்குழு உறுப்பினர் ஏ.கே.வேலு, மாநில வர்த்தக அணி துணை செயலாளர் முருகேசன், மாவட்ட இளைஞரணி செயலாளர் பி சிகணகன், மாவட்ட ஐ.டி விங் செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, ஒன்றிய கழக துணை செயலாளர்களான கலைமணி, மாதவன், கிளைக் கழக செயலாளர்களான புளியம்பட்டி சிவகுமார், கீழ்குப்பம் மணிகண்டன், அத்திகனூர் முனியப்பன், கீழ்குப்பம் கிளை பொருளாளர் கருப்பண்ணன், அத்திகானூர் கிழக்கு கிளை அவைத லைவர் வடிவேல், உள்ளிட்ட ஏராளமான கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு ஏழைகளின் கொடைவள்ளல் விஜயகாந்தின் பிறந்தநாள் நிகழ்ச்சியை சிறப்பித்தனர். இறுதியாக புளியம்பட்டி ஊராட்சி கழக செயலாளர் மணிவண்ணன் நன்றி உரை ஆற்றினார். புளியம்பட்டி ஊராட்சியை சேர்ந்த சுமார் 500க்கும் மேற்பட்டோருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

# திருப்பூரில் நபி புகழ்பாடும் பேரணி ஆயிரக்கணக்கான குழந்தைகள் பங்கேற்பு!



திருப்பூர்:ஆக,27

இஸ்லாமியர்களின் இறைத்தூதர் நபிகள் நாயகத்தின் பிறந்தநாளை முன்னிட்டு, மீலாது நபி விழா இஸ்லாமியர்களால் ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது..

இதன் ஒரு பகுதியாக, திருப்பூரில் மீலாது கமிட்டி சார்பில் நபி புகழ் பாடும் பேரணி நடைபெற்றது.

பெரிய கடைவீதி பகுதியில் உள்ள பெரிய பள்ளிவாசல் அருகே நடைபெற்ற இந்த பேரணிக்கு, திருப்பூர் மாவட்ட ஜமாத்துல் உலமா தலைவர் உமர் பாரூக் தலைமை வகித்தார். பேரணியை பெரிய பள்ளிவாசல் தலைவர் சிராஜுதீன் கொடியசைத்து தொடங்கி வைத்தார். தொடர்ந்து, ஹிதாயத்துல் இஸ்லாம் பள்ளிவாசல் தலைமை இமாம் நாசிர் அஹமது ஹஜ்ரத், நாட்டில் அனைத்து சமுதாய மக்களும் ஒற்றுமையுடனும் அமைதியுடனும் வாழ வேண்டி சிறப்பு பிரார்த்தனை செய்தார்.

இந்த பேரணியில் திருப்பூர் மாநகரின் பல்வேறு பகுதிகளில் இருந்து ஆயிரக்கணக்கான சிறுவர், சிறுமியர்கள் புத்தாடைகள் அணிந்து உற்சாகமாக கலந்து கொண்டனர்.

முக்கிய வீதிகள் வழியாக நடைபெற்ற பேரணியில், அனைத்து மதத்தினரும் சமத்துவத்துடன் வாழ வேண்டும், சமூகத்தில் அமைதியை பேண வேண்டும் உள்ளிட்ட ஒற்றுமை மற்றும் அமைதி தொடர்பான கோஷங்களை எழுப்பியபடி குழந்தைகள் ஊர்வலமாக சென்றனர். நிகழ்ச்சியில் மீலாது கமிட்டி தலைவர் குலாம் காதர் யாசர், செயலாளர் ஜுனைத், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாவட்ட தலைவர் சையது முஸ்தபா உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



ஓணம் திருநாளையொட்டி வேலூர் தோட்டப்பாளையம் கேரள சமாஜத்தில் பெண்கள் அத்தப்பூ கோலமிட்டு கொண்டாடினர். உடன் கேரள சமாஜம் நிறுவனர் ராதா கிருஷ்ணன் மற்றும் ஏராளமானோர் இதில் கலந்து கொண்டனர். அனைவருக்கும் இனிப்புகளை வழங்கி அன்பை வெளிபடுத்தினர்.



# தஞ்சாவூர் அடுத்துள்ள பூண்டி புஷ்பம் கல்லூரியில் சர்வதேச கருத்தரங்கு

தஞ்சாவூர் ஆகஸ்ட் 27 தஞ்சாவூர் அடுத்துள்ள பூண்டி வீரையா வாண்னடையார்நினைவு ஸ்ரீ புஷ்பம் கல்லூரியில் சர்வதேச கருத்துரங்கம் நடைபெற்றது

கல்லூரி வளாகத்தில் நடை பெற்ற பொருளாதார முதுகலை மற்றும் ஆராய்ச்சி துறை, கணினி பயன்பாடு முதுநிலை மற்றும் ஆராய்ச்சி துறை சார்பில் செயற்கை நுண்ணறிவும் வேலை வாய்ப்பு பின் எதிர்கால சவால்க ளும் என்ற சர்வதேச கருத்தரங்கு கல்வி கல்லூரி செயலாளரும், தாளாளருமான கிருஷ்ணசாமி வாண்டையார் தலைமை வகித்தார் கல்லூரி முதல்வர் (பொறுப்பு) மணிராஜ் தொடக்கவுரையாற்றினார்

அமெரிக்காவிலுள்ள டெக் டெக் கன்சல்டிங் நிறுவனதலைமை செயல் அலுவலரும், கல்லூரி முன்னாள் மாணவர்களுமான ரமேஷ் சிறப்புரையாற்றினார். கல்லூரி தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர்சந்திரன், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்

ஏற்பாடுகளை பொருளாதாரத் துறை பேராசிரியர் முல்லைவன நாதன் உள்ளிட்டோர் செய்திருந்தனர்

# வெள்ளிச்சந்தை அருகே கள்ளத் தொடர்பை கண்டித்ததால் மனைவி மீது தாக்கு தொழிலாளி மீது வழக்கு

குளச்சல், ஆக. 27 குளச்சலை அடுத்த வெள்ளிசந்தை பகுதியை சேர்ந்தவர் குமார் (40 ). கூலி தொழிலாளி. இவரது மனைவி ராதிகா (37) இவர்கள் கடந்த 13 ஆண்டுகளுக்கு முன்பு காதலித்து திருமணம் செய்து கொண்டனர். இந்த தம்பதிகளுக்கு 12, 10 வயதுகளில் இரண்டு மகன்கள் உள்ளனர். தற்போது குமார் தனது மனைவி மகன்கள் உடன் மணவாளக்குறிச்சி அருகே உள்ள ஒரு வீட்டில் வசித்து வருகிறார்.

இந்த நிலையில் குமாருக்கு சேரமங்கலத்தை சேர்ந்த ஒரு பெண்ணுடன் கள்ள தொடர்பு ஏற்பட்டுள்ளது. இருவரும் அடிக்கடி தனிமையில் சந்தித்து வந்துள்ளனர். இது குறித்து ராதிகாவுக்கு தகவல் தெரிந்ததும் அவர் கணவனிடம் கள்ளத்தொடர்பை கைவிடுமாறு கண்டித்துள்ளார். இதனால் இருவருக்கும் இடையே தகராறு ஏற்பட்டு வந்துள்ளது. இது குறித்து ராதிகா கணவர் மீது குளச்சல் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலீசார் இருவரையும் அழைத்து சமாதானம் பேசி சேர்ந்து வாழ கூறி ராதிகாவை கணவருடன் அனுப்பி வைத்தனர்.

இதற்கு இடையே குமார் தனது கள்ளக்காதலியுடன் உள்ள தொடர்பை விடாமல் தொடர்ந்து உள்ளார். இதை அறிந்த ராதிகா இது குறித்து மாவட்ட எஸ்பியிடம் புகார் அளித்தார். எஸ்பி இடம் புகார் அளித்ததால் மனைவி மீது குமார் கோபத்தில் இருந்து உள்ளார். சம்பவத்தன்று ராதிகா சாத்தான் விளையில் உள்ள தனது அக்கா வீட்டிற்கு சென்றிருந்தார். அப்போது அங்கு சென்ற குமார்மனைவியின் தலை முடியை பிடித்து முகத்தை சுவரில் இடித்து தாக்கியுள்ளார். இதில் படுகாயம் அடைந்த ராதிகா குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். மணவாளக்குறிச்சி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# மேட்டூர் அணையில் இருந்து ஆக.28ல் தண்ணீர் திறக்கிறார் முதல்வர் விஜய்!

சேலம்: மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசனத்துக்கு நாளை மறுநாள் (ஆக.28) முதல்வர் விஜய் தண்ணீர் திறந்து வைக்கும் நிலையில், சேலம் மாவட்ட ஆட்சியர் இளம்பகவத், மேற்கு மண்டல ஐஜி ரம்யா பாரதி ஆகியோர் மேட்டூர் அணையை இன்று பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

மேட்டூர் அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு, ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 12ம் தேதி தண்ணீர் திறக்கப்படும். நடப்பாண்டில் அணையில் போதிய நீர் இருப்பு இல்லாததால் தண்ணீர் திறக்கப்படவில்லை. இரண்டு மாதங்களைக் கடந்துவிட்டநிலையில், காவிரி டெல்டாபாசனத்துக்கு தமிழக முதல்வர் விஜய் நாளை மறுநாள் (ஆக.28) மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறந்து வைக்கவுள்ளார்.

இதனிடையே, அணை திறப்புக்கான முன்னேற்பாடு மற்றும் பாதுகாப்பு உள்ளிட்ட பணிகளை மாவட்ட நிர்வாகம் மற்றும் காவல் துறையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இதனையொட்டி, மேட்டூர் அணையின் வலது கரையில் விழா மேடை அமைக்கப்பட உள்ள இடம், மேல்மட்ட மதகில் மின் விசையை இயக்கும் இடம், அணை பூங்கா உள்ளிட்ட இடங்களில் மாவட்ட ஆட்சியர் இளம்பகவத் மற்றும் மேற்கு மண்டல ஐஜி ரம்யா பாரதி தலைமையில் சரக டிஐஜி சந்தோஷ் ஹடிமணி, எஸ்பி குத்தாலிங்கம் ஆகியோர் இன்று ஆய்வு செய்தனர்.

மேலும், முதல்வரின்பாதுகாப்புபிரிவு போலீஸாரும் அணையின் வலதுகரை, இடது கரை, 16 கண் மதகு, நிகழ்ச்சி நடக்கும் இடம் உள்ளிட்ட இடங்களை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். இதனையொட்டி, மேட்டூர் அணையில் இருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறப்பதற்கான பணிகளில் நீர்வளத்துறை அதிகாரிகள் முழுவீச்சில் ஈடுபட்டுள்ளனர்.

மேட்டூர் அணையில் வர்ணம் தீட்டும் பணிகளும், மேல்மட்ட மதகு பகுதியில் மதகுகளின் இயக்கங்களும் சரிபார்க்கப்பட்டு வருகிறது.

மேலும், அணையில் இருந்து தண்ணீர் செல்லும் பகுதிகளில் உள்ள புற்கள், கழிவுகள் உள்ளிட்டவை அகற்றும் பணியும் நடந்து வருகிறது.

# செட்டிநாடு ஊராட்சி கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்



செட்டிநாடு ஊராட்சி கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்

சிவகங்கை: சிவகங்கை வடக்கு மாவட்டம், சாக்கோட்டை மேற்கு ஒன்றியம், செட்டிநாடு ஊராட்சி கழக நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம், ஊராட்சி கழக செயலாளர் திரு. சிவசுப்பிரமணியன் தலைமையில் தேத்தான்பட்டியில் நடைபெற்றது.

கூட்டத்தில், சாக்கோட்டை மேற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் திரு. க. சரத்பாலமுருகன் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு, கழகத்தின் அடுத்தகட்ட பணிகள் மற்றும் வரவிருக்கும் உள்ளாட்சித் தேர்தல் பணிகள் குறித்து நிர்வாகிகளுக்கு ஆலோசனைகளை வழங்கினார்.

ஆகஸ்ட் 29ல் கொடியேற்று விழா

கூட்டத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ச. ஜோசப் விஜய் அவர்களின் ஆணைப்படியும், மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை மற்றும் நீர்வளத் துறை அமைச்சர், கழகப் பொதுச் செயலாளர் அண்ணன் N. ஆனந்த் அவர்களின் வழிகாட்டுதலின்படியும், வரும் 29082026 சனிக்கிழமை மாலை 4 மணியளவில், தேத்தான்பட்டி கிளைக் கழகத்தில் கழகக் கொடியேற்று விழா நடத்துவது என ஒரு மனதாக முடிவு செய்யப்பட்டது.

இந்த கொடியேற்று விழா மாண்புமிகு திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆர். சீனிவாச சேதுபதி தலைமையில் நடைபெற உள்ளது. சிவகங்கை வடக்கு மாவட்டச் செயலாளர் உயர்திரு. ஜோசப் தங்கராஜ் முன்னிலையில், சாக்கோட்டை மேற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் திரு. க. சரத்பாலமுருகன் அவர்களின் முன்னிலையில் விழா நடைபெறவுள்ளது.

நிர்வாகிகள் பங்கேற்பு

ஆலோசனைக் கூட்டத்தில் ஒன்றிய இணைச் செயலாளர் திரு. மணிகண்டன், ஒன்றியதுணைச் செயலாளர் திருமதி. சுகன்யா, செட்டிநாடு கிளைக்கழகச் செயலாளர் / ஊராட்சி கழகச் செயலாளர் திரு. சிவசுப்பிரமணியன், ஊராட்சி கழக இணைச் செயலாளர் திரு. சந்துரு உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

மேலும், தேத்தான்பட்டி கிளைக் கழக நிர்வாகிகள், செட்டிநாடு கிளைக்கு உட்பட்ட கழக முன்னோடிகள் மற்றும் பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டு கூட்டத்தை சிறப்பித்தனர்.

வரும் 29082026 அன்று தேத்தான்பட்டி கிளையில் நடைபெற உள்ள கம்பீரக் கொடியேற்று விழாவை சிறப்பாக நடத்துவதற்கான ஏற்பாடுகள் குறித்து கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

# கன்னியாகுமரி 4 வழிச்சாலை பணிகளை டிசம்பருக்குள் முடிக்க மாவட்ட ஆட்சித்தலைவர் உத்தரவு



நாகர்கோவில், ஆக.27

கன்னியாகுமரி முதல் களியக்காவிளை வரை தேசிய நெடுஞ்சாலை துறை சார்பில் 4 வழிச்சாலை பணிகள் நடைபெற்று வருகிறது. இந்த பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு கூறியதாவது :

கேரளா தமிழ்நாடு எல்லையான களியக்காவிளை முதல் கன்னியாகுமரி வரையிலான என். எச் 47 நான்கு வழிச்சாலையில் கூடுதல் கட்டுமான பணிகள் ரூ.1041.3 கோடி மதிப்பில் பணிகள் நடைபெற்று வருகிறது. குறிப்பாக ரயில்வே மேம்பாலம், வடிகால் பணிகள், சுங்கசாவடி, பெட்டி வடிவக்குழாய் பாலப்பணி, பெட்டி வடிவக்குழாய் பாலங்கள் அகலப்படுத்தும் பணி, சிறிய பாலங்கள், பெரிய பாலங்கள், வாகனங்கள் செல்வதற்கான சுரங்கப்பாதை பணிகள், வாகனங்களுக்கான மேம்பாலங்கள், பாதசாரிகளுக்கான மேம்பாலங்கள், பேருந்து நிறுத்தங்கள், நிழற்கூடைகள், சரக்கு வாகனங்கள் நிறுத்து மிடம்,

சேவைச்சாலைகளை அகப்படுத்துதல் என பல்வேறு பணிகள் நடைபெற்று வருகிறது. அதன் ஒருபகுதியாக இன்று குளப்புறம், விளாத்துறை, வாழ்வச்சக்கோஷ்டம், ஆத்திவிளை, தோட்டியோடு, புத்தேரி, வழுக்கம்பாறை, காப்புக்காடு, குன்னத்தூர், இரணியல் உள்ளிட்ட இடங்களில் நடைபெற்று வரும் பணிகள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

நெடுஞ்சாலை பணிகளுக்கு தேவையான ஜல்லி, மணல், சிமெண்ட் உள்ளிட்ட பொருட்கள் அனைத்து தடையின்றி கிடைப்பதை துறை சார்ந்த அலுவலர்கள் உறுதிசெய்ய வேண்டும். நடைபெற்று வரும் அனைத்து பணிகளையும் வரும் டிசம்பர் மாத இறுதிக்குள் முடித்திட துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறு கலெக்டர் தெரிவித்தார்

நடைபெற்ற ஆய்வுகளில் தேசிய நெடுஞ்சாலைத் துறை திட்ட இயக்குநர் சச்சின் குமார், திட்ட பொறியாளர் சிவா, துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.



திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் நகர காவல் ஆய்வாளர் சௌந்தரராஜனிடம் தின தமிழ் நாளிதழை மாவட்ட செய்தியாளர் செ.ரஜினி எம்.ஏ., எம்.பில்.,பி.எட்.,பி.எச்.டி., வழங்கினார்.

# மார்த்தாண்டம் அருகே திருமண ஆசை வார்த்தை கூறி இளம் பெண்ணுடன் உல்லாசம்; வாலிபர் கைது

மார்த்தாண்டம், ஆக. 27

மார்த்தாண்டம் அருகே பம்மம் என்ற பகுதியை சேர்ந்தவர் கௌரிஷ்குமார் (25). அதே பகுதியில் வாகனங்களுக்கான ஸ்பேர் பார்ட்ஸ் கடை வைத்து நடத்தி வருகிறார்.

இவருக்கும் அதே பகுதியில் உள்ள ஒரு தனியார் வங்கியில் வேலை செய்து வரும் கள்ளக்குறிச்சி மாவட்டத்தை சேர்ந்த 28 வயது இளம் பெண்ணுக்கும் இடையே பழக்கம் ஏற்பட்டு உள்ளது. இந்த பழக்கம் நாளடைவில் காதலாக மாறியது.

தொடர்ந்து 2 பேரும் தினசரி சந்தித்து காதலை வளர்த்து வந்தனர். இந்த நிலையில் கௌரிஷ்குமார் இளம் பெண்ணை திருமணம் செய்வதாக ஆசை வார்த்தை கூறி, அவரிடம் தனிமையில் சந்தித்து உல்லாசமாக இருந்து உள்ளார்.

பின்னர் இளம்பெண் கௌரிஷ்குமாரிடம் தன்னை திருமணம் செய்து கொள்ளுமாறு கூறியுள்ளார். ஆனால் கௌரிஷ் குமார் திருமணத்திற்கு மறுப்பு தெரிவித்து வந்துள்ளார்.

இதனால் மனவேதனை அடைந்த இளம் பெண் மார்த்தாண்டம் மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார்.

அதன் பெயரில் கௌரிஷ்குமார் மற்றும் அவரது பெற்றோர் மீது போலீசார் வழக்கு பதிவு செய்தனர். தொடர்ந்து கௌரிஷ்குமாரை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

# நாகர்கோவிலில் தற்கொலை செய்த பள்ளி மாணவனின் தாயார் உட்பட 33 பேர் மீது வழக்கு



நாகர்கோவில், ஆக. 27 நாகர்கோவில் எஸ்எல்பி அரசு மேல்நிலைப் பள்ளியில் பிளஸ் 1 படித்து வந்த பூதப்பாண்டிய அடுத்த ரத்தினபுரம் பகுதி சேர்ந்த கவின்ஜனில் (16) என்ற மாணவர் கடந்த 21ஆம் தேதி தனது வீட்டில் தூக்கு போட்டு தற்கொலை செய்தார். மாணவி ஒருவருடன் ரீல்ஸ் எடுத்ததை ஆசிரியர்கள் கண்டித்து தாக்குதல் தாக்கியதில்மனமுடைந்து கவின் ஜெனில் தற்கொலை செய்ததாக குடும்பத்தினர் புகார் தெரிவித்தனர். இதற்கு காரணமான ஆசிரியர்கள் மீது நடவடிக்கை எடுத்து சஸ்பெண்ட் செய்ய வேண்டும், ஆசிரியர்களை கைது செய்ய வேண்டும் என கோரி 5 நாட்களாக உடலை வாங்க மறுத்து போராட்டம் நடத்தி வருகின்றனர்.

மாணவர்கவினின் உடல் பிரேத பரிசோதனை முடிந்து குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை பிணவறையில் வைக்கப்பட்டுள்ளது. அதிகாரிகள் பேச்சு வார்த்தை நடத்தியும் உடன்பாடு எட்டப்படவில்லை. எனவே இந்த பிரச்சனை தொடர்பாக கடந்த 22 ஆம் தேதி குமரி அரசு மருத்துவக் கல்லூரி முன் கவின் ஜெனில் உறவினர்கள், குடும்பத்தினர்கள் மறியல் போராட்டம் நடத்தினர். மறியலில் ஈடுபட்டவர்களை போலீசார் கைது செய்து விடுவித்தனர்.

இந்த மறியல் போராட்டம் தொடர்பாக நேற்று முன்தினம் 25ஆம் தேதி ஆசாரிபள்ளம் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. மாணவரின் தாயார் லின்சி (37), உறவினர்கள் சுஜாதா (48), நளினி (45), டேவிட் (58), முகேஷ் (31), ஆனந்த் (46) சாம் ஜெனிதாமன் ( 32) சிமியோன் ( 35) மற்றும் 25 பேர் என மொத்தம் 33 பேர் மீது பல்வேறு பிரிவுகளில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மாணவன் பயின்ற பள்ளியில் தற்போதும் போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. மாணவன் தற்கொலை செய்து 5 நாட்களாகியும் தொடர்ந்து உடலை வாங்க மறுப்பதால் போலீசார் அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பாக ஆலோசித்து வருகிறார்கள்.

# நாகர்கோவிலில் லாட்ஜில் வாலிபரிடம் பெண்ணைக் காட்டி உல்லாசத்துக்கு வற்புறுத்தல் புரோக்கர் கைது

நாகர்கோவில், ஆக.27 ராஜாக்கமங்கலம் அருகே உள்ள பகுதியை சேர்ந்த ஜெகன் (42) என்பவர் தனது உறவினர் ஒருவருடன் நாகர்கோவில் ஒழுகினசேரி அவ்வை சண்முகம் சாலையில் உள்ள ஒரு லாட்ஜ் ஒன்றில் நேற்று முன்தினம் தங்கி இருந்தார். அப்போது மதியம் 12 மணி அளவில் இவர்கள் தங்கியிருந்தாறைக்கு வந்த நபர் ஜெகனிடம் பேச்சு கொடுத்துள்ளார். அவரிடம் இந்த லாட்ஜ் அறையில் அழகான பெண்கள் உள்ளனர். நீங்கள் விரும்பினால் அவர்களுடன் உல்லாசமாக இருக்கலாம் எனவும் கூறி முதலில் பெண்களை பாருங்களேன் எனக்கூறி வலுக்கட்டாயமாக ஜெகனை லாட்ஜில் இருந்து மற்றொரு அறைக்கு அழைத்து சென்றுள்ளனர்.

அங்கு 44 வயதான பெண் ஒருவர் அரைகுறை ஆடையுடன்அரைகுறை ஆடையுடன் இருந்துள்ளார்.

இதைபார்த்ததும் ஜெகன் அங்கிருந்து கோட்டார் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போட்டார் போலீசார் அந்த லாட்ஜில் சென்று சோதனை நடத்தி அங்கிருந்த பெண்ணை மீட்டு அழைத்து சென்றனர். விசாரணையில் பண ஆசை காட்டி பெண்ணை விபச்சாரத்துக்கு அழைத்து வந்தது தெரிய வந்தது. விசாரணையில் அந்த பெண் நெய்யூர் ஆலங்கோடு பகுதியை சேர்ந்தவர் என்பது தெரிய வந்தது. மேலும் விசாரணை நடத்தி பெண்ணை காப்பகத்துக்கு அனுப்பி வைத்தனர். ஜெகனை விபச்சாரத்தில் ஈடுபடுத்த முயன்ற திங்கள் நகர் பகுதியை சேர்ந்த செல்லப்பன் (58) என்பவரை போலீசார் கைது செய்தனர்.

# திருவண்ணாமலை கோயிலில் அமைச்சர் ரமேஷ் ஆய்வு பக்தர்கள் புகார்

திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலில் அறநிலையத்துறை அமைச்சர் ரமேஷ் (ஆக. 26) ஆய்வு செய்தார்.

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் ரமேஷ் அவ்வப்போது கோயில்களுக்குச் சென்று ஆய்வு செய்து வருகிறார்.

இந்நிலையில் திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலில் ஆய்வு செய்த நிலையில் அவரிடம் பக்தர்கள் பலரும் புகார் தெரிவித்தனர்.

விஐபிக்கள் தொடர்ந்து தரிசனம் செய்வதால் பொது தரிசனத்தில் விரைந்து சென்று சாமி தரிசனம் செய்ய முடியவதில்லை என்றும் சாமி தரிசனம் செய்ய வழக்கத்தைவிட பல மணி நேரம் காத்திருப்பதாகக் கூறினர்.

பக்தர்கள் அளித்த புகார்களை கேட்ட அமைச்சர் ரமேஷ், இதுகுறித்து ஆய்வு செய்து நடவடிக்கை எடுப்பதாக அவர்களிடம் உறுதி அளித்தார்.

அனைத்தும்சரிபார்க்கப்பட்டுவிரைவில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.

# சேலம் மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெற்ற சாலை பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்த மாதாந்திர ஆய்வு கூட்டம்



சேலம் ஆக 27

சேலம் மாவட்டத்தில் சாலை விபத்துகளை முற்றிலும் குறைத்து விபத்தில்லா பயணத்தை உருவாக்கிடும் வகையில் பல்வேறு சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சேலம் மண்டலத்தில் சாலை பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்த மாதாந்திர ஆய்வுக் கூட்டம் காவல் துறை, போக்குவரத்து துறை, வருவாய்த்துறை மற்றும் நெடுஞ்சாலைத்துறை உள்ளிட்ட துறை அலுவலர்களுடன் ஒவ்வொரு மாதமும் நடத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக கிராமங்களில் சாலை ஓரங்களில் நடந்து செல்லும் பாதசாரிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய வாகனங்களில் பிரதிபலிப்பான் ஸ்டிக்கர் ஒட்டப்பட்டி இருப்பதை உறுதி செய்திடவும். சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு குறும்படங்களை தயாரித்து கிராமப்புற மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தவும் அறிவுறுத்தப்பட்டது. சேலம் மாவட்டத்தில் சாலைகளை ஆக்கிரமித்து வைக்கப்பட்டிருக்கும் அனுமதியற்ற விளம்பரபலகைகள் மற்றும் பேனர்களை அகற்றி தொடர் கண்காணிப்பு மேற்கொள்ளவும் விபத்துக்கள் அதிகம் நடைபெறும் பகுதிகளில் தினமும் காவல்துறையினரின் ரோந்து மற்றும் கண்காணிப்பு மேற்கொள்ளவும் முக்கிய சந்திப்புகளில் போக்குவரத்து காவலர்களை நியமித்து விபத்துகளை தடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதேபோன்று இரண்டுக்கும் மேற்பட்ட உயிரிழப்புகள் ஏற்பட்ட விபத்து நடைபெறக்கூடிய இடங்களில் மஞ்சள் சாலை அடையாளத்தை அமைத்திடவும் முக்கிய சாலைகளில் வேகத்தடைகள், மின்விளக்குகள், அபாய குறியீடுகள், பிரதிபலிப்பான்கள், எச்சரிக்கை பலகைகள் மற்றும் தேவையான சாலை அடையாளங்களை அமைக்கும் பணிகளும் மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது. தொடர் சாலை விபத்துக்கள் ஏற்படும் இடங்களை கண்டறிந்து காவல்துறை, நெடுஞ்சாலைத்துறை, போக்குவரத்து துறை மற்றும் வருவாய் துறை உள்ளிட்ட துறை அலுவலர்கள் ஒருங்கிணைந்து ஆய்வு மேற்கொண்டு ஆலோசித்து எதிர்வரும் காலங்களில் சாலை விபத்துக்கள் ஏற்படாமல் தடுக்கும் வழிமுறைகளை கண்டறிந்து நடவடிக்கை மேற்கொள்ளவும், சாலை விபத்துகளை முற்றிலும் தடுக்கும் வகையில் அலுவலர்கள் சாலை பாதுகாப்பு குறித்து தொடர் விழிப்புணர்வு நடவடிக்கைகளை அதிக அளவில் பொதுமக்கள் தெரிந்து கொள்ளும் வகையில் மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. பொதுமக்கள் அனைவரும் போக்குவரத்து விதிகளை கடைபிடித்து இருசக்கர வாகனங்களில் செல்பவர்கள் ஹெல்மெட் அணிந்தும், நான்கு சக்கர வாகனங்களில் செல்பவர்கள் சீட் பெல்ட் அணிந்தும், நிர்ணயிக்கப்பட்ட வேகத்தில் வாகனங்களை இயக்குதல் உள்ளிட்ட போக்குவரத்து விதிகளை வாகன ஓட்டிகள் கடைபிடிக்க வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறது. இவ்வாறு சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் இளம் பகவத் கூறினார்.

# குமரி, கேரளாவில் ஓணம் பண்டிகை உற்சாக கொண்டாட்டம்

## அத்த கோலமிட்டு மகிழ்ந்த மக்கள்



நாகர்கோவில், ஆக.27 குமரி மாவட்டம் மற்றும் கேரளாவில் ஓணம் பண்டிகை கொண்டாட்டம் நேற்று உற்சாகத்துடன் நடந்தது.

மலையாள மக்களின் மிக பாரம்பரிய திருவிழாவான ஓணம் பண்டிகை குமரி மாவட்டத்திலும் சிறப்பாக, வழக்கமான பாரம்பரிய முறைப்படி மிகுந்த உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டு வருவது வழக்கம். நேற்று அதிகாலை முதலே ஆலயங்கள், வீடுகள், அரசு மற்றும் தனியார் அலுவலகங்கள், பள்ளி மற்றும் கல்லூரி வளாகங்கள், வணிக நிறுவனங்கள் மற்றும் பல இடங்களில் பொதுமக்கள் வண்ண பூக்களை கொண்டு அத்த பூக்கோலம் இட்டு மகிழ்ந்தனர்.

இதற்காக தோவாளை பூ சந்தையில் இருந்து பூக்கள் அதிகளவு விற்பனையானது. மிக முக்கியமாக ஓண சத்யா என்ற பாரம்பரிய அறுசுவை உணவு தயாரிப்பில் பொதுமக்கள் காலை முதலே தங்களை ஈடுபடுத்தினர். குறிப்பாக மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் அத்த பூ கோலம் மற்றும் ஓண விழா கலெக்டர் பிரதாப் தலைமையில் கொண்டாடப்பட்டது. மேலும் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் கலாச்சார அமைப்புகள் சார்பில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள பாரம்பரிய கலை நிகழ்ச்சியான கதகளி மற்றும் பிரம்மாண்ட ஊர்வலம் காண்பதற்காக உள்ளூர் மக்கள் குவிந்தனர்.

தமிழக அரசு நேற்று ஓணம் பண்டிகை முன்னிட்டு குமரி மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை அளித்து இருந்தது. இதனால் மாவட்ட மக்கள் குடும்பத்துடன் இந்த கொண்டாட்டத்தில் மூழ்கி இருந்தனர். விடுமுறை தினமான நேற்று மாவட்டத்தின் முக்கிய சுற்றுலா தளங்களான கன்னியாகுமரி, முக்கடல் சங்கமம், திற்பரப்பு அருவி, பத்மநாபபுரம் அரண்மனை, மாத்தூர் தொட்டி பாலம் மற்றும் தேங்காப்பட்டணம் கடற்கரை ஆகிய பகுதிகளில் உள்ளூர் மற்றும் கேரளா சுற்றுலா பயணிகள் கூட்டம் வழக்கத்தை விட மிக அதிகமாக காணப்பட்டது. அனைத்து பகுதிகளிலும் போலீஸ் பாதுகாப்பு தீவிரபடுத்தப்பட்டிருந்தது.

# பள்ளி மாணவர்களுடன் நேரடியாக கலந்துரையாடிய கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர்



கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியருடன் காபி" நிகழ்ச்சி, மாணவர் கூட்டமைப்பு (ஸ்டுடென்ட் கலெக்ஷவ் ) உறுப்பினர்கள் மாவட்ட ஆட்சியரை நேரடியாகச் சந்தித்து கலந்துரையாடுவதற்கான ஒரு முக்கியமான தலைமைத்துவ நிகழ்வாகும். இந்நிகழ்ச்சியின் மூலம் மாணவர்கள் மாவட்ட நிர்வாகம், ஆட்சி நடைமுறைகள், தலைமைத்துவம், குடிமைப் பொறுப்பு மற்றும் ஜனநாயக விழுமியங்கள் குறித்து நேரடியாக அறிந்து கொள்ளும் வாய்ப்பைப் பெறுகின்றனர். மாணவர்கள் அறிவார்ந்த, நேர்மையான, பொறுப்புணர்வுமிக்க மற்றும் சமூக அக்கறை கொண்ட எதிர்காலத் தலைவர்களாக உருவாக வேண்டும் என்பதே இந்நிகழ்ச்சியின் முக்கிய நோக்கமாகும். மாணவர்கள், மாவட்ட ஆட்சியரின் பங்கு மற்றும் பொறுப்புகளைப் புரிந்துகொள்ளுதல், மாணவர்களின் தலைமைத்துவம், தகவல் தொடர்பு, சிந்திக்கும் திறன் மற்றும் குடிமை விழிப்புணர்வை மேம்படுத்துதல், மக்கள் பங்கேற்புடன் கூடிய ஆட்சி மற்றும் பொது சேவை குறித்து அறிந்து கொள்ளுதல், மாணவர்களின் கருத்துகளை மரியாதையுடனும் நம்பிக்கையுடனும் வெளிப்படுத்தும்திறனை வளர்த்தல், பள்ளி மற்றும் சமூக வளர்ச்சியில் மாணவர்கள் நேர்மறையாகப் பங்களிக்க ஊக்குவித்தல், எதிர்பார்க்கப்படும் கற்றல் விளைவுகள் ஆகியவை முக்கிய பங்காகும். நிகழ்ச்சியின் முடிவில் மாணவர்கள் மாவட்ட நிர்வாகம் மற்றும் ஆட்சி முறையைப் புரிந்துகொள்வார்கள், பொது இடங்களில் தன்னம்பிக்கையுடன் பேசுதல் மற்றும் மரியாதையான கலந்துரையாடலில் ஈடுபடுதல் போன்ற திறன்களைப் பெறுவார்கள். நேர்மையான தலைமைத்துவம் மற்றும் ஆதாரங்களின் அடிப்படையிலான சிந்தனையைப் பின்பற்றுவார்கள். பள்ளி மற்றும் சமூக வளர்ச்சியில் மாணவர்கள் பங்களிக்கக்கூடிய வழிகளை அடையாளம் காண்பார்கள். பொறுப்பான குடிமகனாகவும், ஜனநாயகப் பங்கேற்பாளராகவும் மாற்றும் வகையில் இந்நிகழ்ச்சிகள் நடைபெறுகிறது என மாவட்ட ஆட்சித் தலைவர் .ச.தினேஷ் குமார் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் உதவி ஆட்சியர் (பயிற்சி) . சாய் சைதன்யா ஜாதவ். மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்துக்கொண்டனர்.

# கோயில் பூட்டை உடைத்து நகைகள் கொள்ளை: FRS ஆப் மூலம் திருடர்களை கச்சிதமாகப் பிடித்த போலீசாருக்கு எஸ்பி பாராட்டு !

போச்சம்பள்ளி ஆக 27, போச்சம்பள்ளி அருகே ஒரே வளாகத்தில் உள்ள மூன்று கோயில்களில் பூட்டை உடைத்து நகைகளைத் திருடிய இரண்டு வாலிபர்களை, 'எஃப்.ஆர்.எஸ்' (Face Recognition System) செயலி மூலம் நாகரசம்பட்டி போலீஸார் அதிரடியாகக் கைது செய்துள்ளனர். சமயோசிதமாகச் செயல்பட்டு திருடர்களைப் பிடித்த காவலருக்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

ஒரே வளாகத்தில் 3 கோயில்களில் கொள்ளை: கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி அடுத்த அகரம் கிராமத்தில் காளியம்மன், திரௌபதி அம்மன் மற்றும் செல்லியம்மன் கோயில்கள் ஒரே வளாகத்தில் அமைந்துள்ளன. நேற்று முன்தினம் இரவு, மர்ம நபர்கள் சிலர் இந்த கோயில்களின் பூட்டை உடைத்து உள்ளே புகுந்துள்ளனர். பின்னர், அம்மன் சிலைகளின் கழுத்தில் இருந்த தங்கத் தாலி, வெள்ளி கிரீடம் மற்றும் பித்தளைப் பொருட்களைக் கொள்ளையடித்துத் தப்பினர்.

ரோந்துப் பணியில் சிக்கிய பைக்: அன்று இரவு நாகரசம்பட்டி



காவல் நிலைய சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் காளியப்பன் மற்றும் தலைமை காவலர் சிவன் ஆகியோர் இரவு நேர ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது மருதேரி ஆற்றங்கரை ஓரமாக அனாதையாகக் கைவிடப்பட்ட நிலையில் ஒரு இருசக்கர வாகனம் கிடப்பதைக் கண்டு, சந்தேகத்தின் பேரில் அதனை மீட்டு காவல் நிலையம் கொண்டு சென்றனர்.

ஸ்டேஷனுக்கே வந்த திருடர்கள்: சிறிது நேரத்தில் இரண்டு இளைஞர்கள் காவல் நிலையம் வந்து, அந்த இருசக்கர வாகனம் தங்களுடையது எனக் கூறி திரும்பக் கேட்டுள்ளனர்.

அவர்கள் மீது சந்தேகமடைந்த தலைமை காவலர் சிவம், வண்டியை கேட்டு வந்த இருவரையும் 'FRS' (முக அங்கீகார தொழில்நுட்ப) ஆப் மூலமாகப் புகைப்படம் எடுத்துச் சோதித்தார்.

FRS ஆப் கொடுத்த க்ளூ அதிரடி கைது: சோதனையில், அந்த இளைஞர்களில் ஒருவனான சூரியன் (என்கின்ற சூர்யா) மீது ஏற்கனவே காவேரிபட்டினம் காவல் நிலையத்தில் திருட்டு வழக்கு இருப்பது கண்டறியப்பட்டது. இதையடுத்து, காவேரிப்பட்டணம் காந்தி நகர் பகுதியைச் சேர்ந்த அந்த இரண்டு வாலிபர்களையும் போலீஸார் அதிரடியாகக் கைது செய்தனர். அவர்களிடமிருந்து திருடப்பட்ட தங்க, வெள்ளி நகைகள் மற்றும் பித்தளைப் பொருட்கள் முழுமையாக மீட்கப்பட்டன.

எஸ்பி அனிதா ஐபிஎஸ் பாராட்டு: தொழில்நுட்பத்தை முறையாகப் பயன்படுத்தி, காவல் நிலையம் தேடி வந்த திருடர்களைச் சாதுரியமாகக் கைது செய்த நாகரசம்பட்டி காவலர் சிவத்தின் பணியைப் பாராட்டி, கிருஷ்ணகிரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் (SP) அனிதா ஐபிஎஸ் அவர்கள் நேரில் அழைத்து பாராட்டுச் சான்றிதழ் வழங்கி ஊக்கப்படுத்தினார். எஸ்பியிடம் பாராட்டு பெற்ற காவலருக்குக் காவல் நிலைய வட்டாரங்கள் மற்றும் பொதுமக்கள் தரப்பில் வாழ்த்துகள் குவிந்து வருகின்றன.


# விவசாயம் குறு சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் உள்கட்டமைப்பு மற்றும் இணைந்த செயல்பாடுகளுக்கான கடன் அளவீடு நிர்ணயம்



சேலம் ஆக 27 சேலம் மாவட்டத்தில் 2026 2027 நிதியாண்டில் முன்னுரிமை கடன் பிரிவுகளுக்கான இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு வருடாந்திர கடன் திட்டம் வெளியிடப்பட்டுள்ளது. இந்த திட்டம் மாவட்டத்தின் நிதி தேவைகளை முன்னறிவித்து அதன் மூலம் நிலைத்த பொருளாதார வளர்ச்சி மற்றும் கிராமப்புற முன்னேற்றத்தை வலுப்படுத்துவதை நோக்கமாக கொண்டுள்ளது. வங்கிகள் சேலம் மாவட்டத்தில் உள்ள தொழில் முனைவோர்களுக்கு உரிய நேரத்தில் கடன் உதவிகள் வழங்கி மாவட்டத்தின் வளர்ச்சிக்கு பங்காற்றிட வேண்டும் அதன்படி 2026 2027 நிதியாண்டிற்கான வருடாந்திர கடன் திட்டத்தில் விவசாயம், குறு சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் உள்கட்டமைப்பு மற்றும் இணைந்த செயல்பாடுகளுக்கான கடன் அளவீடுகளை விரிவாக குறிப்பிடப்படுகிறது. அதன்படி சேலம் மாவட்டத்திற்கான 20262027 நிதியாண்டிற்கான மொத்த தொகை ரூ 42558. 54 கோடி கடன் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் விவசாயத்திற்காக ரூ 25079. 69 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இது தவிர குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்களுக்கு ரூ 13,594.06 கோடியும் கல்விக்கு ரூ 77.57 கோடியும் இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டமானது 2025 2026 நிதி ஆண்டியின் ஏசிபி இலக்கை விட 12.16 சதவீதம் அதிகமாக உள்ளது. மாவட்டத்தில் வேளாண்மை எந்திரம், நவீன நுண் நீர்ப்பாசன முறைகள், கால்நடை வளர்ப்பு உள்ளிட்டவற்றில் அதிக வாய்ப்பு இருப்பதால் இதில் கவனம் செலுத்தவும், நடத்து நடுத்தர மற்றும் நீண்ட கால கடன்களை அதிகரிக்கவும் கல்வி, வீடு அமைப்பு மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் போன்ற முக்கிய துறைகளில் கூடுதல் நிதி உதவி வழங்கவும் வங்கிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. தொழில் முனைவோருக்கான உதவி கிராமப்புற பகுதியில் டிஜிட்டல் வங்கி சேவைகளை விரிவுபடுத்துதல், ஏற்றுமதியை ஊக்குவித்தல், சந்தைப்படுத்தும் அணுகுமுறையை மேம்படுத்துதல் மற்றும் குறைந்த செலவிலான வீடு அமைப்பு வசதிகளை உருவாக்குதல், அதனை ஊக்குவித்தல் போன்றவை இந்த திட்டத்தின் முக்கிய அம்சங்கள் ஆகும். அதேபோன்று அதேபோன்று 2025 2026 நிதியாண்டில் சேலம் மாவட்ட சுய உதவிக் குழுக்களுக்கு ரூ 1720.75 கோடி கடனாக வழங்கி தமிழ்நாட்டில் முதன்மை மாவட்டமாக திகழ்கிறது.

சேலம் மாவட்டத்தில் அனைத்து வங்கிகளும் சிறப்பாக செயல்பட்டு முதல் காலாண்டில் முன்னுரிமை கடன் திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கில் 31.36% அதாவது ரூ 13,347.70 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. விவசாய கடன், கல்வி கடன், தொழில் கடன் மற்றும் வீட்டு கடன் ஆகியவற்றில் 100 சதவீத இலக்கினை அடைய வங்கிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் இளம் பகவத் கூறினார்.

# தருமபுரி குமாரசாமிபேட்டை சிவசுப்பிரமணியசாமி கோவில் வருஷாபிஷேக விழா



தருமபுரி ஆகஸ்ட் 27 தருமபுரி குமாரசாமிப்பேட்டை சிவசுப்பிரமணியசாமி கோவில் கடந்த 2008ம் ஆண்டு ஆவணி மாதத்தில் மகா கும்பாபிஷேக விழா வெகு விமர்சையாக நடைபெற்றது. இதனைத்தொடர்ந்து ஆண்டு தோறும் கும்பாபிஷேக விழாவை நினைவுபடுத்தும் வகையில் வர்ஷாபிஷேக விழா சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. அதன்படி இந்தாண்டு வர்ஷா அபிஷேக விழா கணபதி பூஜையுடன் தொடங்கியது. தொடர்ந்து மூலவர் மற்றும் உற்சவருக்கு சிறப்பு அபிஷேக ஆராதனை மற்றும் வழிபாடுகள் நடைபெற்றது. பின்னர் சாமிக்கு உபகார பூஜைகளும், மகா தீபாரதனையும் நடைபெற்றது. பின்னர் மேள தாளங்கள் முழங்க சாமி சிறப்பு அலங்காரத்துடன் திருவீதி உலா நடைபெற்றது. இந்த விழாவில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். விழாவை யொட்டி பக்தர்களுக்கு சிறப்பு பிரசாதம் மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டது. இதற்கான ஏற்பாடுகளை விழாக் குழுவினர் மற்றும் செல்வந்தர் சமூகத்தினர் செய்திருந்தனர்.

# பளுகல் அருகே கடை முன்பு தூங்கிய தொழிலாளி உயிரிழப்பு

மார்த்தாண்டம், ஆக. 27

மார்த்தாண்டம் அடுத்த பளுகல் கண்ணுமாமூடு பகுதியை சேர்ந்தவர் ராஜேஷ் குமார் (46)கூலி தொழிலாளி. இவரது மனைவி சுஜா (36). இந்த தம்பதிக்கு இரண்டு மகள்கள் இருந்தன.ர் இதில் மூத்த மகள் புற்றுநோய் பாதிக்கப்பட்டு ஏற்கனவே இறந்து விட்டார். இதனால் மது குடிக்கும் பழக்கத்துக்கு ஆளாகிய ராஜேஷ்குமார் அடிக்கடி மது குடித்துவிட்டு மனைவியிடம் தகராறு செய்து வந்துள்ளார். இதனால் கடந்த 8 ஆண்டுகளுக்கு முன்பு சுஜா கணவரிடம் கோபித்து கொண்டு தனது பெற்றோரின் வீட்டிற்கு சென்று விட்டார்.

இதற்கிடையில் ராஜேஷ் குமாரின் வீடு பழுதடைந்துள்ளது என்பதால் அவர் கண்ணுமாமூடு சந்திப்பில் உள்ள ஒரு கடை வளாகத்தில் தினமும் படுத்து தூங்கி வந்துள்ளார். இந்த நிலையில் சம்பவ தினம் இரவும் கடை முன்பு படுத்து தூங்கி உள்ளார். மறுநாள் காலை கடைக்கு வந்தவர்கள் ராஜேஷ் குமாரை எழுப்ப முயன்றனர். ஆனால் அவர் அசைவற்று மயங்கி கிடந்தார். இதை அடுத்து அவரை மீட்டு கொடுத்த அரசு மருத்துவமனை கொண்டு சென்றனர். அங்கு அவரை பரிசோதித்த டாக்டர்கள் ராஜேஷ் குமார் ஏற்கனவே இறந்து விட்டதாக கூறினார். இது குறித்து பளுகல் காவல் நிலையத்தில் சுஜா புகார் அளித்தார். போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதுபோன்று குழித்துறை அருகே இடவிளாகம் பகுதியை சேர்ந்தவர் சுனில் குமார் (44). கூலி தொழிலாளி. திருமணமாகாத இவர் தனியாக வீட்டில் வசித்து வந்தார். இதனால் அதிக அளவில் மது பழக்கத்திற்கு ஆளாகியுள்ளார். நேற்று முன்தினம் இரவு வீட்டுக்கு சென்று கதவை பூட்டி விட்டு மின்விசிறியில் தூக்கு போட்டு தூங்கியுள்ளார். அடுத்த நாள் காலை அவரது சகோதரர் விஜயகுமார் என்பவர் ஜன்னல் வழியாக உள்ளே பார்த்த போது சுனில்குமார் தூக்கில் தொங்கிய நிலையில் கண்டு, உடனடியாக அவரைமீட்டு குழித்துறை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவரை பரிசோதித்த டாக்டர்கள் அவர் ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர். இது குறித்து களியக்காவிளை போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# வேலூர் டியுகோ பெயிண்ட் விற்பனையகததில் ஏசியன் பெயிண்ட்ஸ் கலர் கியூப் அறிமுக விழா



வேலூர், ஆக 27 வேலூர் தோட்டப்பாளையம் காட்பாடி சாலையில் அமைந்துள்ள டியூகோ பெயிண்ட் விற்பனையகத்தில் ஏசியன் பெயிண்ட்ஸ் நிறுவனத்தின் கலர் கியூப் (Colour Cube) அறிமுக நிகழ்ச்சி உரிமையாளர் என்.நூருல் அமீன் தலைமையில் நடைபெற்றது.

இதில் ஏசியன் பெயிண்ட்ஸ் நிறுவனத்தின் முதல் நிலை துணைத் தலைவர் பிரக்யான் குமார், உதவி பொது மேலாளர் ஹரி நாராயணன் மண்டல மேலாளர்கள் ரத்தினவேல், ராஜ்வர்மன், பகுதி மேலாளர் முகமது பிலால் கலந்து கொண்டனர்.

இங்கு அறிமுகப்படுததப்பட்ட ஏசியன் பெயிண்ட்ஸ் நிறுவனத்தின் கலர் க்யூப் வாடிக்கையாளர்களிடையே பொருளை வாங்கி பயன்படுத்துவதற்கு பதிலாக தொடுதல் மற்றும் உணர்தலை ஏற்படுத்துவதன் மூலம் வாடிக்கையாளர்கள் தங்கள் வீடுகளுக்கான பெயிண்ட் வண்ணங்களைதாங்களே தேர்வு செய்யவும் உதவுகிறது. புதிதாக மெட்டாலிக் கலர் மற்றும் வால்பேப்பர்கள் ஆகியவை விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது. மேலும் அறிமுக சலுகையாக 50000 க்கு பொருட்கள் மேல் வாங்குபவர்களுக்கு சிறப்பு வவுச்சர்களும் ஒரு வார காலத்திற்கு வழங்கப்பட உள்ளது.

# தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகத்தில் உலக நாட்டுப்புறவியல் நாள் விழா



தஞ்சாவூர் ஆகஸ்ட் 27 தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழக நாட்டுப்புறவியல் துறை சார்பில் உலக நாட்டுப்புறவியல் நாள்சிறப்பு நிகழ்ச்சியை நடைபெற்றது

நாட்டுப்புறவியல் துறை உதவி பேராசிரியர் இளையராஜா வரவேற்றார் .நாட்டுப்புறவியல் துறை தலைவர் காமராஜர் நிகழ்ச் சி குறித்து பேசினார். இதில் "எனது கலைப்பயணம்" என்ற தலைப்பில் கலைச்சுடர் மணி விருது பெற்ற நாட்டுப்புற கலைஞர் ராஜேந்திரன் கலந்து கொண்டு பேசினார் . உதவி பேராசிரியர் மாலதி நன்றி கூறினார். முனைவர் பட்ட ஆய்வாளர் ராஜேஷ் தொகுத்து வழங்கி னார்

தென்னக பண்பாட்டு மையத்தில் நடந்த கலை விழாவில் பங்கு பெற்ற மாணவர்களுக்கு இலக்கியத்துறை பேராசிரியர் இளையா பிள்ளை சான்றிதழ் வழங்கினார் .இதில் பேராசிரியர் கணபதி, ராஜம் கணபதி அறக்கட்டளை சார்பில் நாட்டுப்புறவியல் துறை மாணவர்களுக்கு நூல்கள் வழங்கப்பட்டன.இந்த நிகழ்ச்சி தமிழ் பல்கலைக் கழக பேராசிரியர்கள், ஆய்வாளர் கள், மாணவர்கள் மற்றும் நாட்டுப் புறவியல் ஆர்வலர்கள் கலந்து கொண்டனர்.

# சாவு ஊர்வலத்தில் நடனமாடியதில் தகராறு: அரிவாளால் வெட்டப்பட்ட தவெக உறுப்பினர் சிகிச்சை பலனின்றி பலி

திருவள்ளூர் அருகே சாவு ஊர்வலத்தில் நடனம் ஆடுவதில் ஏற்பட்ட தகராறில் அரிவாளால் வெட்டப்பட்டு படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த தவெக உறுப்பினர் சிகிச்சை பலனின்றி பலியானார்,

திருவள்ளூர் அடுத்த கடம்பத்தூர் அகரம் பகுதியில் ரமணி என்ற வயதான பெண் ஒருவர் உடல் நலக் குறைவால் நேற்று உயிரிழந்தார்,

அப்போது சாவு ஊர்வலத்தில் நடனம் ஆடுவதில் இரு தரப்பினருக்கிடையே வாக்குவாதம் முற்றி கைகலப்பு ஏற்பட்டுள்ளது,

அருகில் இருந்தவர்கள் அதனை தடுத்து நிறுத்தி இரு தரப்பினரையும் சமாதானப்படுத்தினர்

இதனை தொடர்ந்து உயிரிழந்த பெண்ணின் உடல் தகனம் செய்வதற்காக சுடுகாடு பகுதிக்கு எடுத்துச் சென்றபோது இளைஞர்கள் ஒரு புறமாக மது அறிந்து கொண்டிருந்ததாக கூறப்படுகிறது

அப்போது மது அருந்தி கொண்டிருந்த இளைஞர்களுக்கிடையே மீண்டும் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது,

பின்னர் ஒரு தரப்பினர் அகரம் பகுதியைச் சேர்ந்த தமிழக வெற்றிக் கழக உறுப்பினர் மணிகண்டன் 24 என்ற இளைஞரை கழுத்துப் பகுதியில் வெட்டியதில் இளைஞர் ரத்த வெள்ளத்தில் சரிந்தார்

மணிகண்டனின் அலறல் சத்தம் கேட்டு சுடுகாடு பகுதியில் இருந்தவர்கள் அலறடித்துக் ஓடி வந்து பார்த்த போது ரத்த வெள்ளத்தில் மயக்க நிலையில் சரிந்து கிடந்த மணிகண்டனை மீட்டு 108 ஆம்புலன்ஸ் உதவியுடன் திருவள்ளூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர்

மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தவர் மேல் சிகிச்சைக்காக சென்னை ராஜீவ் காந்தி மருத்துவமனையில் இரவு அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த அவர் இன்று காலை சிகிச்சை பலனின்றி பலியானார்,

மணிகண்டன் உறவினர்கள் குற்றவாளிகளை உடனடியாக கைது செய்யக் கோரி நேற்றைய தினம் திருவள்ளூர் சுங்குவார்சத்திரம் சாலையில் சாலை மறியல் போராட்டம் மேற்கொண்டிருந்தனர்,

மணிகண்டனை வெட்டி தப்பிய நபர்களை கடம்பத்தூர் போலீசார் தனிப்படை அமைத்து தேடி வருகின்றனர்,

சாவு ஊர்வலத்தில் நடனம் ஆடுவதில் ஏற்பட்ட தகராறில் தவெக கட்சியை சேர்ந்த உறுப்பினர் அரிவாளால் வெட்டப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தவர் சிகிச்சை பலியானது அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது,

**DHINA TAMIL DAILY** : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.